# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2333/13 - 2023 මැයි මස 22 වැනි සඳුදා - 2023.05.22

*2333/13 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய நான், குறித்த சபைக்கு ஹக்மன நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் உற்பத்திக் குழாய்க் கிணறு ஒன்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால் இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**ஜீவன் தொண்டமான்,**
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/02/MH/533.
*நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2023, மே 15.*

1A – G 39569 – 09 (2023/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மாத்தறை மாவட்டத்தில், ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 293B, முருதாமுரய மேற்கு கிராம அலுவலர் பிரிவில் முருதாமுரே கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஜீ. உபுல் அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 089 மற்றும் 2021.02.26 ஆந் திகதிய திட்டப்படத்தில் 1A ஆம் இலக்கத் துண்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 0.0132 ஹெக்டயார் (5.2 பேர்ச்சஸ்) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளினுள் அமைந்துள்ள பதிரணகெதிவெல அல்லது மலபலாவ என்றழைக்கப்படும் காணிப்பகுதி.*

வடக்கு : *கம்கெதிவெல என்றழைக்கப்படும் காணிப்பகுதி ;*

*கிழக்கு* : *கம்கெதிவெல என்றழைக்கப்படும் காணிப்பகுதி மற்றும் இ. கி. தி. 185 இல் துண்டு இலக்கம் 227 உடைய காணிப்பகுதி ;*

தெற்கு : *இ. கி. தி. 185 இல் துண்டு இலக்கங்கள் 227 மற்றும் 228 உடைய காணிப்பகுதிகள் இரண்டு மற்றும் திட்ட இலக்கம் 940510 இன் துண்டு இலக்கம் 02 ;*

மேற்கு : *திட்ட இலக்கம் 940510 இன் துண்டு இலக்கம் 02 மற்றும் பிரதேச சபை வீதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* திரு. ஹேவா வெலேகே அநுர, இலக்கம் 69, எவரிவத்த வீதி, வத்தளை.

EOG *05-0207*